மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 189/2022 |
| பெயர் | : | செல்லையா(PW1) |
| த/பெ. | : | குப்புசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the4th day of September 2023

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனாக என்றால் இல்லை. நான் ரத்து செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 12.08.2010 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்டை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் சொன்னேன். நான் தாக்கல் செய்திருக்கும் பிராதினை படித்து பார்த்து புரிந்த பின்னர்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் உரிமை கோரும் சொத்தின் விபரத்தை வழக்கில் சொல்லியுள்ளேன்.

3) நான் உரிமை கோரும் சொத்தின் சர்வே எண். 613/3 , 613/4 என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பிராதில் ஒரு அயிட்டம் சர்வே எண். 613/3 என்றும் 2 வது அயிட்டம் 613/4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சரியாகத்தான் சொல்லப்பட்டுள்ளது. 2 வது பிரதிவாதி 1 வது பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

4) என்னிடம் காட்டப்படும் வாசா ஆ 14 மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் . பிராதில் சொல்லியுள்ள 2 சர்வே எண்களும் அந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வேஎண். 613/1 எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஏதாவது ஆவணம் வைத்துள்ளேனா என்றால் எங்களுடைய கிரைய ஆவணம்தான் அதற்கு ஆவணம்.

5) என்னிடம் காட்டப்படும் வாசா. ஆ1 மற்றும் வாசா. ஆ 17 தான் நான் மேல் சொல்லும் கிரைய ஆவணம் என்றால் சரிதான். இந்த 2 ஆவணங்களிலும் சர்வே எண். 613/1 எந்த பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டு ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை. பிரதிவாதிகள் சர்வே எண். 613 / 1 ற் காக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

6) அது தூத்துக்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண். 56/2021 ஆக நிலுவையில் இருந்து தற்போது இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் இங்கு மாறுதல் ஆன விபரம் தெரியாது. சர்வே எண். 613/3, சர்வே எண். 613/4 ற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான்.

7) பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் நான் அவர்கள் இடத்தை ஆக்கிரமித்து குளியல் அறை கட்டியுள்ளேன் என்றும் அதை அப்புறப்படுத்த வேண்டி தாக்கல் செய்தார்கள் என்றால் குளியல் அறை பரம்பரையாக அங்குதான் உள்ளது. கவர்னகிரி ஊர் அமைந்திருக்கும் இடம் 20 ஏக்கர் இருக்கும் என்றால் இருக்கலாம்.

8) மொத்த இடத்திற்கு முன்பு நத்தம் சர்வே எண் . 402 என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் காட்டியுள்ள உட்பிரிவுகள் எல்லாம் சர்வே எண். 613/3 , சர்வே எண். 613/4 , சர்வே எண். 613/1 நத்தம் சர்வே காலத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். நத்தம் சர்வே காலத்தில் யார் யார் எந்த இடத்தில் கட்டிடம் கட்டியிருக்கிறார்களோ அந்த இடத்தில் அந்த நபருக்கு நத்தம் பட்ட வழங்கப்ட்டது என்றால் சரிதான்.

9) நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா. ஆ 5 நத்தம் சர்வே எண். 613/4 நிலம் ஒப்படைப்பு ஆவணத்தின் அடிப்படையில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நில ஒப்படைப்பு ஆவணம் அரசு நிலத்தை நிலம் இல்லாதவர்க்கு இனாமாக கொடுப்பதுதான் என்றால் சரிதான். அரசு நில ஒப்படைப்பு படி என்னுடைய சொத்தை எனக்கு ஒப்படைக்கமாட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் கட்சி செய்யும் சர்வே எண். 613/3 , சர்வே எண். 613/4 , அரசு நில ஒப்படைப்பபாக தந்தார்கள் என்றால் எங்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் கொடுத்தார்கள்.

10) இந்த வழக்கில் பிரதிவாதிகள் வா.சா. ஆ 1 மற்றும் 17 காண்பிக்கப்பட்ட சொத்துக்கள் நத்தம் சர்வே எண். 613/3 நத்தம் சர்வே எண். 613/4 ல் இல்லை என்றும் அது வேறு எங்கேயோ உள்ளது என்றும் நான் வம்பாக மேற்படி நத்தம் சர்வே எண். 613/3 ,நத்தம் சர்வே எண். 613/4 அங்கு தான் உள்ளது என்று வீணாக கட்சி செய்கிறேன் என்று எதிர் வழக்குரை சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

11) பிரதிவாதிகள் ஆவணத்தில் இருக்கும் சொத்தில் வேறு இடத்தில் உள்ளது என்று நான் இந்த இடத்தில் தான் சொத்து உள்ளது கட்சி செய்து வருகிறோம் என்பதால் சொத்து எங்கு உள்ளது என்று குழப்பம் உள்ளது என்றால் குழப்பம் இல்லை. நத்தம் சர்வே எண். 613/3 நத்தம் சர்வே எண். 613/4 ல் என்னுடைய வீடுகள் உள்ளது. அதன் வடக்கே யாருடைய இடம் உள்ளது என்றால் எங்களுடைய இடம் தான் உள்ளது. அந்த இடத்திற்கும் வடக்கே பிரதிவாதிகள் இடம் உள்ளது.

12) என் வீட்டிற்கு கிழக்கே பாதை உள்ளது. என் வீட்டிற்கு தெற்கே ரோடு உள்ளது. என் வீட்டிற்கு மேற்கே காலி இடம் உள்ளது, அது யாருடைய இடம் என்று தெரியவில்லை. நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா. ஆ 1 மற்றும் 17 ல் உள்ள எல்கை மாலும் நான் தற்போது வீடு வைத்திருக்கும் எல்கை மா லுக்கு பொருந்தாது என்றால் சரியல்ல, பொருந்தும்.

13) வா.சா .ஆ 1 மற்றும் 17 உள்ள எல்கை மால்தான் எங்கள் வீடு இருக்கும் இடத்திலும் உள்ளது. நான் வா.சா .ஆ 1 மற்றும் 17 அடிப்படையில் தான் உரிமை கோரியுள்ளேன். வா.சா. ஆ 5 ஆவணத்தின் படி நான் உரிமை கோரவில்லை என்றால் அதன் அடிப்படையிலும் உரிமை கோருகிறேன். வா.சா. ஆ 1 மற்றும் 17 ல் இருக்கும் சொத்தும் நத்தம் சர்வே எண். 613/3 நத்தம் சர்வே எண். 613/4 ம் அந்த இடத்திற்குதான் வருகிறது என்பதை கா ண்பிக்க நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமித்து அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14) வா.சா .ஆ 1 முதல் 17 ஆவணங்களில் வா.சா. 14 போக இதர ஆவணங்களில் சர்வே எண். 613/1 என்பது துலங்காது என்றால் சரிதான். வா.சா. ஆ 14 ல் இரண்டவாது பிரதிவாதி 1 வது பிரதிவாதி சர்வே எண். 613/3 நத்தம் சர்வே எண். 613/4 உள்ள வீட்டை தென்பக்க எல்கையாக காண்பித்து

செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டு அருகில் உள்ள காலி மனையை தான் எல்கையாக காட்டியுள்ளார்கள். தென்வடல் பாதையை தான் கீழ்பக்க எல்கையாக அந்த ஆவணத்தில் காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கு பக்கத்தில் பாக்கியலட்சுமி என்பருக்கு பாத்தியப்பட்டது என்று காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

15) வடக்கு பக்கத்தில் மனுவேல் மகன் கோவில்பிள்ளையின் காலிமனைக்கு தெற்கு என்று  காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படி கீழ்பக்கத்தில் உள்ள பாதைதான் அவர்களுக்கு உள்ள பாதை என்றால் இல்லை, அது எங்கள் இடத்தில் நாங்கள் பாதையாக போட்டுள்ளோம். அவர்களுக்கு பாதை கிடையாது என்றால் அவர்கள் இடத்தில்  கிழக்கில் 1 மீட்டர் அகலத்தில் தென்வடல் பாதை யில் இருந்தது. நாங்கள் எங்கள் இடத்தையும் கொடுத்து அதை 4 மீ அகலத்தில் பாதையாக மாற்றியுள்ளோம்.

16) என் அப்பா காலத்திலேயே 1 மீட்டர் அகலத்தில் இருந்த பாதையை கூடுதலாக 3 மீ கொடுத்து 4 மீ அகலத்தில் பாதையாக மாற்றியதாக என் அம்மா சொன்னார். எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு தெரிய அதில் 4 மீ அகல பாதைதான் இ ருந்து வருகிறது. அந்த பாதையில் 1 வது பிரதிவாதி தண்ணீர் கட்டுவதற்காக சரல் அடித்தார்கள் என்றால் சரிதான். அது நாங்கள்  சேமித்து வைத்திருக்கும் குப்பைவரை வந்ததுதான் பிரச்சனை . அந்த பிரச்சனை காவல்நிலையம் வர சென்றது.

17) காவல் நிலையத்தில் நான் 1 வது பிரதிவாதி அந்த பாதையில் வரக்கூடாது என்று சொன்னேன் என்றால் அது பொதுப்பாதை என்பதால்  1 வது பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சரல் அடிக்கக்கூடாது பஞ்சாயத்துதான் செய்ய வேண்டும் என்று தடுத்தோம். என் வீட்டின் தென்பக்கத்தில் தெரு உள்ளது. பிரதிவாதிக்கு இதுதான் பாதை அதுதான் மழைக்காலத்தில் சரல் அடித்து சரிசெய்து வைத்தால்தான் பயன்படுத்த முடியும் என்றால் சரிதான்.

18) பொதுப்பாதையில் மண் போடுவதால் அது தனிப்பட்ட பா தையாகிவிடாது என்றால் சரிதான். ஆனால் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் மேலும் பிரச்சனையாகிவிடும் என்பதால் மண் போடக்கூடாது என்று சொன்னோம். தற்போது வரை அந்த ரோட்டில் பஞ்சாய்த்தில் இருந்து மண்போட்டு ரோடு போடவில்லை.

19) காவல் நிலையம் விசாரணையில் முடிந்த பின்னர் தான் 1 வது பிரதிவாதி என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் இல்லை, அதற்கு முன்பாகவே வழக்கு தாக்கல் செய்திருந்தார். 1 வது பிரதிவாதி என் மீது வழக்கு தாகக்ல் செய்தபின்னர் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவிற்கு 2 பெண் பிள்ளைகள். அவர்கள் பெயர் சண்முகத்தாய், வேலம்மாள். என் அம்மா சண்முகத்தாய் இறந்துவிட்டார். வேலம்மாள் உயிருடன் உள்ளார். சொத்து என் தாத்தாவின் அப்பாவின் பெயரில் உள்ளது. அப்படி என்றால் என் தாத்தாவின் அப்பாவுடன் பிறந்த அனைவருக்கும் சொத்தில் பங்குள்ளது என்றால் சரிதான்.

20) என் தாத்தாவிற்கு அவருடன் பிறந்தவர்கள் சொத்தை உரிமை ஒப்படைத்தற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றால் சரிதான். என் சித்தி என் தாயாருக்கு சொத்தை ஒப்படைத்ததற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றால் இல்லை, என் சித்திக்கும் பங்கு உண்டு. என் சித்தி இந்த வழக்கில் கட்சி கிடையாது என்றால் சரிதான்.

21) என் அம்மா இறந்து 6 வருடங்கள் ஆகிறது. என் உடன் பிறந்தவர்கள் 8 பேர். என் உடன் பிறந்தவர்கள் இந்த வழக்கில் கட்சி கிடையாது என்றால் சரிதான். நத்தம் சர்வே எண். 613/1 க்கு சம்மந்தம் இல்லாத வா.சா. ஆ 1 மற்றும் 17 ஆவணங்களை வைத்துக்கொண்டு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண். 613/1 ஐ அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

22) என்னுடைய தவறான உள்நோக்கத்திற்காகதான் தற்போது எண் என்று 613/3, 614/4 ஆகியவற்றை இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல.பிரதிவாதிகள் சொத்தை பொறுத்து வாதிகளாகிய எங்கள் இருவருக்கும் எந்த உரிமையும் கிடையாது ஆவணத்தை ரத்து செய்ய கோரமுடியாது என்றால் சரியல்ல.

23) நான் வம்பு வழக்கு தாக்கல் செய்ததால் தான் என் உடன் பிறந்தவர்கள் யாரும் கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் நாங்கள் இணைந்து முடிவெடுத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . என் உடன்பிறந்தவர்களுக்கும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் அவசியம் இல்லாதவர்கள்.

24) நானும் என் சகோதரி மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதிருந்த வம்பு வழக்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நத்தம் சர்வே எண். 613/1ல் புதிதாக ஆக்கிரமித்து கட்டியிருக்கும் குளியல் அறையை அப்புறப்படுத்து கூடாது என்பதற்காக த ான் இந்த வம்பு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

25) குளியல் அறை சுற்றி நான்கு புறமும் தகரம் மேலே கூரை யில்லாமல் வைத்துள்ளோம். நான் தாக்கல் செய்திரூக்கும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் பொய்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.